Queensland Health

# பல்கலாச்சாரச் சுகாதாரக் கொள்கை மற்றும் செயல் திட்டம் 2024–2029 MHPAP

**குயின்ஸ்லாந்தில் உள்ள பல்கலாச்சாரப் பின்னணியைக் கொண்ட அனைத்து மக்களும் சரிநிகரான விளைவுகளுடனான, பாதுகாப்பான மற்றும் கலாச்சார ரீதியாகப் பொருத்தமான பொதுச் சுகாதாரப் பராமரிப்பை அணுக முடியும்.**




**கொள்கைகள்**

- சுகாதார சமத்துவம், பாதுகாப்பான மற்றும் தரமான பராமரிப்பு
- சான்றுகளை அடிப்படையாகக் கொள்வது மற்றும் சமூகம் குறித்த அறிவைக் கொள்வது
- விரிவான பராமரிப்பு
- இனவாதம் மற்றும் பாகுபாடுகளை நிவர்த்தி செய்வது
- ஒன்றுகூட்டிய அர்ப்பணிப்பு, பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல்





அனைத்து பன்முக கலாச்சார மக்களுக்கும் சுகாதார விளைவுகளில் MHPAP கவனம் செலுத்தும். உள்ளிட்ட நபர்கள்:

- வெளிநாட்டில் பிறந்த பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிகளுடன் ஆஸ்திரேல
- அகதிகள் அல்லது புகலிடம் கோரும் நபர்களாக ஆஸ்திரேலியாவிற்கு குடி
- தற்காலிக விசாக்களில் நியூசிலாந்து குடி
- பருவகால தொழிலாளர்கள், சர்வதேச மாணவர்கள் மற்றும் பிற தற்காலிக விசா பாதைகளில் உள்ளவர்கள் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட மெடிகேர் அணுகலைக் கொண்ட
- ஆஸ்திரேலிய தென் கடல் தீவுகள்.

**MHPAP கருத்துப் பரிமாறல்**

27 அமைப்புகள்

725 நபர்கள்

மாநிலம் தழுவியது

**வழிமுறைகள்**
**22** இலக்குப் பட்டறைகள்
**15** சமர்ப்பிப்புகள்
**43** நேருக்கு நேரான சந்திப்புகள்
**161** கருத்துக்கணிப்புப் பதில்கள்

MHPAP என்பது பல்கலாச்சார மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு Queensland Health (குயின்ஸ்லாந்து சுகாதாரத் துறை) ஆல் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட முதல் கொள்கையாகும்.

சுகாதார அமைப்புக்கான எங்கள் கொள்கையில் சமூகத்தின் குரல் பிரதிபலிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, சமூக உறுப்பினர்கள் மற்றும் அமைப்புகள் உட்பட பல பங்குதாரர்களுடன் இணைந்து MHPAP வடிவமைக்கப்பட்டது.

MHPAP ஆனது சுகாதார அமைப்பு முழுவதும் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை வழங்கும், எனவே பல்கலாச்சார சமூகங்களின் சுகாதார தேவைகளுக்கு நாம் சிறப்பாக எதிர்வினையாற்ற முடியும்.

MHPAP இன் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைவதில் Queensland Health ஆனது அதன் முன்னேற்றத்தை கண்காணிக்கும்




**பல்கலாச்சார சமூகங்களின் ஆரோக்கியத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த தங்கள் தனித்துவமான அனுபவங்களையும் பரிந்துரைகளையும் பகிர்வதன் மூலம் இந்த கொள்கைக்குப் பங்களித்த அனைவருக்கும் Queensland Health நன்றி செலுத்துகிறது.**

Queensland Government





| முன்னுரிமைப் பகுதிகள் | குறிக்கோள்கள் | எமக்குக் கூறப்பட்ட கருத்துகள் |
|---|---|---|
| முன்னுரிமை 1<br>**தடுப்பு மற்றும் தொடக்க நிலைத் தலையீடு** | • நல்லாரோக்கியம் மற்றும் நல்வாழ்வு விளைவுகளைப் அணுகுவதில் மற்றும் அடைவதில் பல்கலாச்சார பின்னணியில் உள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை நன்றாகப் புரிந்துகொள்வதற்கு அவர்களுடன் நாங்கள் சேர்ந்து பணியாற்றுவோம்.<br>• இந்த சிக்கல்களைச் சமாளிக்க உதவும் சுகாதார சேவைகளை வடிவமைக்க பல்கலாச்சார சமூகங்களுடன் பணியாற்றுவோம்<br>• பல்கலாச்சார பின்னணியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் சொந்த ஆரோக்கியத்தை நிர்வகிக்கவும், நோயைத் தவிர்க்கவும், சுகாதார சேவைகளை அணுகவும் ஆதரவளிப்போம். | **“தடுப்பு முன்முயற்சிகள் தகுதிவாய்ந்த சுகாதார நிபுணர்களால் நன்கு ஆதரிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் சமூகத்தின் தடுப்புக் கொள்திறனை உருவாக்குங்கள், ஆனால் அவற்றை வழிநடத்துவது, ‘சமுகம்’ ஆகிய நாமாக இருக்கட்டும்.”** |
| முன்னுரிமை 2<br>**உயர்தர மொழிச் சேவைகள் மற்றும் தகவல் தொடர்பு வளங்கள்** | • மொழிபெயர்த்துரைப்பாளர்களை எப்படி, எப்போது, ஏன் ஈடுபடுத்த வேண்டும் என்பதை Queensland Health ஊழியர்கள் அறிந்திருப்பதை உறுதி செய்வோம்.<br>• மொழியியல் ரீதியாக மாறுபட்ட பின்னணியைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் விருப்பதேர்வான மொழியில் தகவல்களை வழங்குவோம்.<br>• மொழிச் சேவைப் பணியாளர்களை ஆதரிப்பது உட்பட, நோயாளிகளுக்கு வழங்கப்படும் மொழிச் சேவைகளின் தரத்தை நாங்கள் கண்காணித்து மேம்படுத்துவோம். | **“மொழித் தடைகள் நமது சமூகங்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்குப் பாரிய தடையாக இருக்கின்றன. சுகாதார அமைப்பிற்குள் கிடைக்கக்கூடிய மொழிபெயர்த்துரைப்பு சேவைகளின் பயன்பாடு சரியாக புரிந்து கொள்ளப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை.”** |
| முன்னுரிமை 3<br>**நிலையான, அணுகக்கூடிய, மன அதிர்ச்சிச் தகவலறிந்த (trauma-informed) மற்றும் கலாச்சார ரீதியாக பாதுகாப்பான சேவைகள்** | • குயின்ஸ்லாந்து சுகாதார சேவைகளில் நோயாளிகளை மதிக்கும் அத்துடன் இனவாதம் மற்றும் பாகுபாடு அற்றதொரு கலாச்சாரத்தை உருவாக்குவோம்.<br>• பல்கலாச்சாரப் பின்னணியைக் கொண்டவர்கள், மன்றங்கள் மற்றும் குழுக்களில் பங்கேற்கும் எண்ணிக்கையைக் கூட்டுவோம்.<br>• பல்கலாச்சார சமூகங்கள் சுகாதார சேவைகளை அணுகும்போது அவர்களின் உரிமைகளைப் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் நாங்கள் ஆதரவளிப்போம்.<br>• சுகாதார அமைப்பில் நோயாளிகள் வழிகாட்டப்படுவதற்கும் பாதுகாப்பாக உணரவதற்கும் உதவ கலாச்சார ரீதியாக பொருத்தமான திட்டங்களை நாங்கள் உருவாக்குவோம். | **“எங்கள் சமூகங்களின் தேவைகளை சிறப்பாகப் பூர்த்தி செய்ய வழக்கமான நடைமுறையை மாற்றியமைப்பதற்கான நெகிழ்வுத்தன்மை முக்கியமானது, பல்கலாச்சார செவிலியர் வழிகாட்டிகள் போன்றன சிக்கலான அமைப்பிற்கு வழிகாட்டப்படுவதற்கு உதவியாக உள்ளன.”** |
| முன்னுரிமை 4<br>**உற்பத்தித்திறனுடைய கூட்டாண்மை, ஒத்துழைப்பு மற்றும் இணைப்புகள்** | • பல்கலாச்சார சமூகங்களுடன் வலுவான மற்றும் மரியாதையான உறவுகளை உருவாக்குவோம்.<br>• பல்கலாச்சார சமூகங்கள் சுகாதார சேவையை எளிதாக அணுகுவதற்கு சுகாதார அமைப்பின் பிற பகுதிகளுடன் இணைந்து செயல்படுவோம்.<br>• சாத்தியமான சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை அடைவதற்கு பல்கலாச்சார சமூகங்கள் ஆதரிக்கப்படுவதை உறுதிசெய்ய சமூக அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவோம். | **“COVID-19 நோய்த்தொற்றை அடுத்து பல படிப்பினைகள் கிடைத்தன, இது சுகாதாரத்தின் அனைத்து பகுதிகளிலும், சமூகம் மற்றும் பிற துறைகளுடன் இணைந்து சுகாதாரத்தின் சமூக நிர்ணயிப்பாளர்களுக்கு, தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்புடன் செயல்படுவதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.”** |
| முன்னுரிமை 5<br>**பல்வகைத்தன்மையுடைய, உள்ளடங்கலான மற்றும் கலாச்சார ரீதியாகக் கொள்திறன் கொண்ட சுகாதாரப் பணியாளர் அணி** | • பலதரப்பட்ட சுகாதாரப் பணியாளர் அணியைக் கட்டியெழுப்ப, உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளை நாங்கள் செயல்படுத்துவோம்.<br>• Queensland Health ஊழியர்களுக்குக் கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பான மற்றும் எதிர்வினையாற்றக்கூடிய பராமரிப்பை வழங்குவதற்குப் பொருத்தமான பயிற்சியை வழங்குவோம்.<br>• பல்கலாச்சாரப் பின்னணியில் உள்ள Queensland Health ஊழியர்கள் பணியிடத்தில் மதிப்பு, மரியாதை மற்றும் மேம்படுத்தலைப் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம். | **“கலாச்சார மற்றும் தொழில்முறைப் பல்வகைத்தன்மை அமைப்பில் பிரதிபலிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில், சுகாதாரப் பணியாளர்களின் அணியில் எங்கள் சமூகங்களில் சில பிரதிநிதித்துவப்படுத்தப்படாமல் போகலாம். தரவுகளில் தொழிலாளர் பல்வகைத்தன்மையின் சமமான விநியோகம் மற்றும் எங்கள் சமூகங்களைச் சேர்ந்த மக்களுடன் பணியாற்றுவது பற்றிய புரிதலைப் பெறுவதற்குப் பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்களையும் நாம் பார்க்க வேண்டும்.”** |
| முன்னுரிமை 6<br>**பல்கலாச்சாரத் தரவு மற்றும் ஆய்வு** | • சுகாதார சேவைகளை மேம்படுத்தப் பல்கலாச்சார சமூகங்கள் பற்றிய தகவல்களை நாங்கள் சேகரித்து பகுப்பாய்வு செய்கின்ற முறையை மேம்படுத்துவோம்.<br>• பல்கலாச்சார சமூகங்களைப் பாதிக்கும் உடல்நலப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் மேலும் ஆய்வு செய்வோம்.<br>• பல்கலாச்சார சமூகங்களின் சுகாதாரத் தேவைகள் மற்றும் விளைவுகளை நன்கு புரிந்துகொள்வதற்காக, அவர்களை ஆய்வில் ஈடுபடுத்துவோம். | **“ கலாச்சார ரீதியாகப் பொருத்தமான மற்றும் பயனுள்ள சேவைகளை, எங்கள் சமூகங்களுக்காக மேம்படுத்துவதற்கு, ஆய்வு ஆதாரங்களை உருவாக்குவது மற்றும் மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளில் எங்கள் சமூகங்களுடன் இணைந்து பணியாற்றுவது முக்கியமாகும்.”** |





SC2400222 /தமிழ்